இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

நான் யாருக்கும் அடிமையாய் இல்லாதிருந்தும் பலரைக் கிறிஸ்துவிடம் கொண்டுவர என்னை எல்லாருக்கும் அடிமையாக்கிக் கொண்டேன். வலுவற்றவர்களைக் கிறிஸ்துவிடம் கொண்டுவர வலுவற்றவர்களுக்கு வலுவற்றவனானேன். எப்படியாவது ஒரு சிலரையேனும் மீட்கும்படி நான் எல்லாருக்கும் எல்லாமானேன். நற்செய்தியால் வரும் ஆசியில் பங்கு பெறவேண்டி நற்செய்திக்காக எல்லாவற்றையும் செய்கிறேன். 1 கொரி 9: 22-23

# பிப்ரவரி மாத தீபகற்ப மலேசிய மேய்ப்புப்பணி கருபொருளை விளக்குகிறார் ஆயர் செபஸ்தியன்

இயேசு கிறிஸ்துவில் அன்பார்ந்த நண்பர்களே, இயேசு கிறிஸ்துவின் அன்பு சீடர்களே! கோலாலம்பூர், பினாங்கு மற்றும் மலாக்கா-ஜொகூர் ஆகிய மூன்று மறைமாவட்டங்களில் உள்ள உங்கள் அனைவரிடமும் உரையாடுவதை ஓர் அற்புத நிகழ்வாகக் கொள்கிறேன். தீபகற்ப மலேசிய திருஅவைக்கு 2021-ஆம் ஆண்டுக்காக தூய ஆவியானவர் வெளிப்படுத்தும் செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளவதில் மிக்க மகிழ்ச்சி கொள்கிறேன்,.

‘எதிர்நோக்கு’ என்பது தீபகற்ப மலேசிய மேய்ப்புப்பணியின் கருபொருள். எதிர்நோக்கை நம்புவது, எதிர்நோக்கில் வாழ்வது, எதிர்நோக்கை அளிப்பது, மற்றும் எதிர்நோக்கை உயிரோடு வைத்திருப்பது இந்த கருபொருளில் அடங்கும்.

நாட்டில் நிலவும் இந்த நெருக்கடி இவ்வளவு காலமாக நீடித்து வருவதைக் கண்டு, நம்முடைய இறைவேண்டல்களுக்குப் பதில் இல்லையே என்றும், இன்னும் எவ்வளவு காலம் இந்நிலை நீடிக்கும் என்றும் கலக்கமுற்றிருக்கலாம். நம்மில் சிலர் சோர்வாகவும், நம்பிக்கையில் தளர்ந்தும், குழப்பத்துடனும் இருக்கலாம். .ஒருவேளை நம்மில் சிலர் சினத்துடனும் இருக்கலாம்.

உங்கள் மனதின் நிலை, உங்கள் உள்ளதுதின் நிலை, உங்கள் ஆன்மாவின் நிலை எதுவாக இருந்தாலும், இயேசு உங்கள் ஒவ்வொருவரிடமும் வந்தடைகிறார். இயேசு உங்களை அடைய விரும்புகிறார். அவர் உங்களைத் தொட்டு, எதிர்நோக்கை உங்களுக்கு அளிக்கிறார்.

கடந்த ஆண்டு, தீபகற்ப மலேசியா மேய்ப்புபணியின் கருபொருள் குணமளிப்பு என்பதாகும். ஆம், நாம் குணப்படுத்தப்பட வேண்டும். தொடர்ந்து குணமடைய வேண்டும். இவ்வாண்டுக்கான பொதுவான கருப்பொருள் ‘எதிர்நோக்கு’ ஆகும். மேலும் பிப்ரவரி மாதத்திற்கான கருபொருள் ‘வேற்றுமையில் அல்லது பன்முகத்தன்மையில் ஒன்றுமை’ என்பதாகும். திருத்தந்தை இதை மையப்படுத்தி Fratelli Tutti அதாவது, ‘சகோதர சகோதரிகளே! என்கிறார். இது நாம் கொண்டிருக்கும் பன்முகத்தன்மையின் அடிப்படையில் பிறந்தது.

ஒற்றுமை பற்றி பேசுவதை நாம் ஒருபோதும் நிறுத்த மாட்டோம். நாம் நினைப்பது மேலோட்டமான ஒற்றுமை அல்ல. திருஅவையில் காணப்படும் ஒற்றுமை, அனைவரையும் சகோதர சகோதரிகள் என்று அழைக்க வழிவகுக்கிறது. நாம் பன்முகத்தன்மை குறித்தோ அல்லது ஒற்றுமை குறித்தோ அச்சம் கொள்ளவில்ல.
.

ஏன்? கடவுளைப் பற்றிய நமது புரிதலின் அடிப்படையில், இயேசு கிறிஸ்துவில் தன்னை வெளிப்படுத்திய கடவுள் தந்தை, மகன், தூய ஆவியார் என்ற மூன்று ஆள்களில் உள்ளார். இதன்வழி ஒற்றுமையில் . பன்முகத் தன்மையும் ஐக்கியத்தில், பன்முகத்தன்யும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இந்த பன்முகத் தன்மை கடவுளிடமும் உள்ளது. மேலும், மனிதகுலத்தின் படைப்பிலும் இது பிரதிபலிக்கிறது.


ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ், பினாங்கு மறைமாவட்டம்

அடுத்து, தேசியத்தின் அடிப்படையில், இனத்தை, நிறத்தை சமயத்தை, கலாச்சாரத்தை மதத்தை அடிப்படையாகக் கொண்ட எந்தவொரு சீரானத் தன்மையும் மற்றவர்கள் மீது திணிக்க முயற்சிக்கப்படுவது கடவுளுக்கு நேர்மாறானது என்பதை வரலாறு வெளிப்படுத்தியுள்ளது, இன்றும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. இத்தகைய நடவடிக்கையானது தீமையை விளைவிக்கும்.

எனவே, உங்களுக்குள்ளும், உங்கள் உடலிலும், உங்கள் ஆன்மாவிலும், உங்களைச் சூழ்ந்துள்ள சூழலிலும், எதிர்கொள்ளும் பன்முகத்தன்மைக்கு பயப்பட வேண்டாம். ஆமாம், நாம் உண்மையில் இந்த பன்முகத்தன்மையை சுவாசிக்கிறோம், இந்த ஒற்றுமை, இந்த ஒன்றிப்பு பன்முகத்தன்மையில் உள்ளது. ஏனென்றால், மூவொரு கடவுளின் சுவாசமே நம்மிலும், மனிதகுலத்திலும் படைப்பிலும் உள்ளது.

எனவேதான். 2021-ஆம் ஆண்டானது ‘எதிர்நோக்கை’ அடித்தளமாகக் கொண்டுள்ளது. அதாவது, எதிர்நோக்கை நம்புவது, எதிர்நோக்கில் வாழ்வது, எதிர்நோக்கை அளிப்பது, மற்றும் எதிர்நோக்கை உயிரோடு வைத்திருப்பது இந்த கருபொருளில் அடங்கும்.

நமது பன்முகத்தன்மையில் இந்த ஒற்றுமை என்பது கனவு காண்பது அல்ல. மாறாக, அது உண்மையானது, அது தனிப்பட்டது, அது உறுதியானது, அது வரலாற்று. அது உங்களுக்கு அடுத்திருப்பவரைப் போல உண்மையானது.

ஆகவே, தூய ஆவியிடமிருந்து நம்பிக்கையின் கொடையை பெற முயற்சிக்கும் போது, நிச்சயமற்ற இந்த நாள்களில் நாம் ஆக்கப்பூர்வமாக இருக்க முயற்சிப்போம். அக்காலக்கட்டதில் தொடர்ந்து நாம் இணைந்திருப்போம். மற்றவர்களிடமிருந்து நம்மைப் பிரிக்க சுவர்களைக் எழுப்ப விரும்பாமல் உறவுப் பாலங்களைத் தொடர்ந்து உருவாக்கு வோம்.

இதைத்தான் தூய ஆவியானவர் திருத்தந்தை பிரான்சிஸிடமும், நம்மிடமும், அனைவரிடமும் கூறுகிறார்.. இதையே திருஅவைக்கும், இங்கே தீபகற்ப மலேசியாவிற்கும் அதற்கு அப்பாலும் வெளிப்படுத்துகிறார். இதன் காரணமாகவே, நாம் கீழ்ப்படிவோம், பிரதிபலிப்போம், இறைவேண்டல் செய்வோம், தியானிப்போம், பரிந்துரை செய்வோம், இந்த நம்பிக்கையின் கொடையை நாம் அனைவரும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு முன்பு பெற்றுக்கொள்வோம்.

இக்காலக்கட்டத்தில் நீங்கள் பலரை உடல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் அணுக முடியாமல் போகலாம், நிர்ணயிக்கப்பட்ட பாதுகாப்பு வழிமுறை (SOP) மற்றவர்களை அணுகுவதலிருந்து நம்மை கட்டுப்படுத்துகிறது.

ஆனால், அது உங்கள் குடும்பங்களில், உங்கள் சுற்றுப்புறத்தில், உங்கள் அ.தி.ச. க்களில், உங்கள் பங்குகளில், உங்கள் ஊரில் எங்கிருந்தாலும் ஒருவர் மற்றவருக்கு செய்யக்கூடிய சிறப்புச் செயலை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

2021 ஆம் ஆண்டில் தொடர்ந்து பயணம் செய்யும் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிக்க விரும்புகிறேன். பிப்ரவரியில் நோயாளிகளின் இறைவேண்டல் தினம், புனித லூர்து அன்னை விழா, சீனப் புத்தாண்டு ஆகியவற்றைத் தொடர்ந்து திருநீற்று புதனும் வருகிறது.

கடுகு விதை பற்றிய உவமை போன்ற சிறிய வழிகளில் இவை அனைத்திற்கும் பதிலளிப்போம். அது சிறியது, ஆனால் அது ஒரு பெரிய மரமாக மாறி, அனைத்து வகையான பறவைகளுக்கும் நிழலைக் கொடுக்கலாம், அங்கு வந்து ஓய்வெடுக்கலாம் மற்றும் கூடு கட்டலாம். நீங்களும் நானும் அந்த கடுகு விதையாக இருப்போம் என்பது எனது நம்பிக்கை.

ஆகவே, நோயுற்றுள்ள உங்கள் அனைவருக்கும், நோயுற்றவர்களுக்கான இறைவேண்டல் நாளில், நமது புனித லூர்து அன்னை திருவிழாவின் போது உங்களை மிகவும் சிறப்பாக நினைவில் கொள்வோம் என்று நாங்கள் விரும்புகிறோம். உங்கள் அனைவருக்கும் சீனப் புத்தாண்டு வாழ்த்துக்கள். திருநீற்றுப் புதன்கிழமையோடு தொடங்கும் தவக்காலம் ஒரு அற்புதமான காலமாக உங்கள் அனைவருக்கும் அமைய நாங்கள் விரும்புகிறோம். இக்காலக் கட்டத்தில் யாரும் மறக்கப்படுவதில்லை. யாரும் விடுபடுவதுமில்லை. இதுதான் நாம் தேடும் ஒற்றுமை. பன்முகத்தன்மையில் நாம் தேடும் ஒன்றிப்பு.

கடவுள் உங்கள் அனைவரையும்
ஆசீர்வதிப்பாராக. S

**ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ்.**
பினாங்கு மறைமாவட்டம்

**அன்புடையீர், சீனப் புத்தாண்டு விடுமுறையை முன்னிட்டு அடுத்த வாரம் தெ ஹெரால்டு வெளிவராது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**

# ஆயர் மன்றத்தின் மடல்: கோவிட் -19 க்கான தடுப்பூசியும் நோய்த்தடுப்பும்

அன்புமிக்க இறைமக்களே, ஏறக்குறைய கடந்த ஓராண்டுகாலமாக, மலேசியாவின் பேராயர்களும், ஆயர்களும் உங்களோடு இணைந்து கோவிட்- 19 பற்றிய அறிந்திருப்பதுமட்டுமல்லாது, அதன் பாதிப்புக்கும் உள்ளாகியுள்ளோம். உலகம் முழுவதும் பரவிய இத்தொற்று பலவாறு உலக மக்களுக்குப்பெரும் சவாலாக இருந்து வருகிறது. அகில உலக மனித சகோதரத்துவத் தினத்தைக் கொண்டாடும் வேளையில் இத்தொற்றின் காரணமாக இறந்தோரையும், நோயுற்றோரையும் நினைவுகூர்கிறோம்.

இதனிமித்தம் நாம் அனுவரும் தியாகங்கள் செய்ய அழைக்கப்படுகிறோம். இந்த நிச்சயமற்ற சூழலில் நாமும் நமது செயல்பாடுகளை மறுசீரமைப்பு செய்ய வேண்டியுள்ளது. சமூகத்தில் உள்ள பலதரப்பட்ட மக்கள் அவரவர் பங்கை ஆற்றிவருகிறார்கள். தங்கள் உயிருக்கு அபத்து என்றுணர்ந்தும் மனுக்குல சகோதரத்திற்கு முன்னுரிமை அளித்து வருகிறார்கள்.

**பிரிவு I**

**1. கத்தோலிக்க சமூக போதனை- பொறுப்பேற்றல், அணுகுதல், ஒற்றுமை**

கடந்த சில மாதங்களாக கோவிட்-19க்கான தடுப்பூசி, நோய்த்தடுப்பு ஆகியவற்றில் மக்களின் பலவிதமான கருத்துகளைச் செவிமடுத்து வருகிறோம். இதனிமித்தம் வத்திக்கான் வெளியிட்டுள்ள இரு ஆவணங்களை படிக்குமாறு இறைமக் களைக் கேட்டுக்கொள்கிறோம்.

அதே வேளையில் கோவிட்-19 குறித்த தடுப்பூசியை அமுலாக்கம் செய்யும் அரசாங்கம் பின்னவருவனவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

1. சரியான தகவல்: பொதுமக்கள் இதுகுறித்து முழுமையான தகவலை அறிய உரிமம் பெற்றுள்ளனர். எனவே, அறிவியல் சார்ந்த விபரங்கள் மட்டுமல்ல சமயம் சார்ந்த விபரங்களும் பொதுமக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

**2. விளைவும் பாதுகாப்பும்**

துரிதமாகத் தேவைப்படும் காரணத்தினால் இந்த தடுப்பூசியானது மனிதர்கள் மட்டில் பயன்படுத்தப்படும் வேளையில் தடுப்பூசியை ஏற்போரின் பாதுகாப்பில் அக்கறை தேவைப்படுகிறது. இத்தருணத்தில் பாதுகாப்புக் குறித்து முழுமையான அறிக்கைகள் இல்லை. ஆகவே, இப்பணியில் முழு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**3. பெறுதல்**

தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதில் பாகுபாடு காட்டப்படக் கூடாது. செல்வந்தர்களுக்கு முதலிலும் வசதி குறைந்தோருக்குப் பின்னரும் என்ற வழிமுறை ஆகாது. அனைவருக்கும் தடுப்பூசி கிடைத்திட செய்வது அரசாங்கத்தின் தலையாயக் கடமை

**3. பொறுப்பேற்றலும் வெளிப்படைத்தன்மையும்**

தடுப்பூசிக்குப் பொறுப்பேற்றுள்ள அனைத்துத் துறையினரும், இதை வியாபாரம் ஆக்கிவிடக்கூடாது. இதைப் பயன்டுத்தி பணம் சம்மாதிப்பதை நோக்கம்கக் கொள்ளக்கூடாது.

**4.அனைவரின் பொது நலனுக்காக**

கோவிட் -19, அனைவருக்கும் துன்பத்தை மட்டுமல்லாமல் பலவிதமான அழிவுகளையும் கொண்டு வந்துள்ளது. இச்சூழலில் அரசியல் இலாபம் தேடுவதையோ மலேசியர்களைப் பிரித்தாளவோ கூடாது.

**பிரிவு 2**

**கத்தோலிக்க நன்னெறி போதனை - கோவிட்-19 தடுப்பூசி**

கோவிட்-19க்கான தடுப்பூசி பற்றிய சஞ்சலங்கள் உலக மக்கள் மத்தியில் நிலவுவதை அறிவோம். தடுப்பூசியின் செயல்திறனில் அல்லது பாதுகாப்பில் மட்டுமல்லாது கத்தோலிக்கத் திருஅவை யின் நன்னெறி படிப்பனையிலும் இது குறித்து கேள்விகள் எழுப்பப்படுகின்றன. இந்த பிரிவில் இது குறித்த சிறு விளக்கத்தை அளிக்க விழைகிறோம்.

**1. கருச்சிதைவு செய்யப்பட்ட உயிர் களின் திசுக்களிலிருந்து உருவாக்கப் பட்டுள்ள, கோவிட்-19 தடுப்பு மருந்தை மனச்சான்றுடன் ஏற்றுக்கொள்ள முடியுமா,?**

இந்த தடுப்பூசியானது நெறிமுறையற்றது, ஏனெனில் இதன் பரிசோதனை அல்லது உருவாக்கம் கருச்சிதைவு கருக்களின் திசுக்களிலிருந்து செய்யப்பட்டது எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால், அவை திசுக்களின் மேல்பகுதி என்பதால் இந்த தடுப்பூசி மருந்துகள் கருவின் திசுக்களைக் கொண்டிருக்கவில்லை என்பது தெரிய வருகிறது.

**2. கருச்சிதைவு செய்யப்பட்ட உயிர் அணுக்களின் திசுக்களிலிருந்து எடுக்கப் பட்ட உயிரணுக்களை அடிப்படை யாகக் கொண்டு தடுப்பூசிகளை உருவாக்குவது பற்றி திருஅவையின் நிலைப்பாடு என்ன?**

ஆய்வாளர்களும் உற்பத்தியாளர்களும் அவை நெறிமுறைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்படுவதை உறுதிசெய்யும் சூழலில், நாம் இந்த தடுப்பூசியைப் பொறுத்தமட்டில் அதன் தயாரிப்பின் இறுதி நிலையை மட்டுமே கருத்தில்கொள்ள வேண்டும். அதாவது, திசுக்களின் மேல்பகுதி என்பதால் இந்த தடுப்பூசி மருந்துகள் கருவின் திசுக்களைக் கொண்டிருக்க வில்லை என்பதாகும்.

**3.பொதுமக்கள் இந்த தடுப்பூசி யைப் பெற்றுக்கொள்வதைப் பற்றி திருஅவை கூறுவதென்ன?**

முற்றிலும், இத்தகைய கருக்களின் திசுக்களைப் பயன்படுத்தாத, மாற்று மருந்து வரும் வரை, மக்களின் நலனைக் காப்பது அனைவரின் கடமை என்ற உணர்வுடன் இந்த தடுப்பூசிகளைப் பெறுவதற்கு, தடையேதும் இல்லை என்று கூறுகிறோம்.

**4.கோவிட்-19-க்கான புதிய தடுப்பூசி யைப் பற்றி ?**

இத்தகைய கருச்சிதைவிலிருந்து கிடைக் கும் திசுக்களின்றி புதிய தடுப்பூசிகள் நம் நாட்டுக்கு வருவதாக அறிக்கைகள் உள்ளன. அவை வரும் வரை இந்த தடுப்பூசியை நாம் ஏற்கத்தான் வேண்டும்.

தடுப்பூசி என்பது, தனி மனிதர்களின் நலனைக்காப்பது மட்டும் சார்ந்தது அல்ல, இதில் பொதுநலனும் அடங்கியுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டி, நாம் இந்நோயை பெற்று, அதனை பிறருக்கு பரவவிடாமல் இருக்க, இத்தடுப்பூசியைப் பெறுவது அத்தியாவசியமாகிறது எனும் நிலையில், மக்களின் நலனைக் காப்பது அனைவரின் கடமை என்ற உணர்வுடன் தடுப்பூசிகளைப் பெறுவதற்கு, தடையேதும் இல்லை .

**5.எனது மனசாட்சிக்கொப்ப இந்த தடுப்பூசியை நான் போட்டுக்கொள் காமல் இருக்கலாமா?**

பொதுநலனைக் கருத்தில் கொண்டால், இந்த தடுப்பூசியை போட்டுக்கொள்வது வரவேற்கத்தக்கது. அச்சமும், நிச்சயமற்ற சூழலும் நிலவும் இக்காலக்கட்டத்தில், கத்தலிக்கர்கள் என்ற முறையில், ஆன்மீக மற்றும் சமூகக் கடப்பாட்டை நிறைவேற்ற வேண்டும். காலத்தின் அறிகுறியை அறிந்து, நாம் திருஅவையை முன்வைத்து அல்ல பிறரோடும் மனுக்குலம் முழுவதையும் சீர்த்தூக்கிப் பார்த்து, அவர்களோடு கொண்டுள்ள ஐக்கியத்தை முன்னிட்டு இத்தடுப்பூசியை ஏற்க நமது நம்பிக்கை அழைக்கிறது. அன்னை மரியா, நமது பாதுகவலரான புனித யோசேப்பு ஆகியோரின் பரிந்துரையில் கடவுளின் உதவியை நாடுவோம்.

**மலேசிய பேராயர்களும் ஆயர்களும்**

# பரிவிரக்கம் செயலில் வெளிப்படட்டும்

இன்றைய நற்செய்தியில், இயேசு அயராது போதித்து, குணமளித்து வருகிறார். பேய்களுக்குக் கட்டளையிட்டு அடக்குகிறார். பேதுருவின் மாமியாரை குணமளிக்கப்படுகிறார். தந்தையாகிய கடவுள் இட்டப் பணியைப் பொறுப்போடு நிறைவேற்றுகிறார். "என்னை அனுப்பிய வரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் உணவு" (யோவான்4:34) என்பதில் கண்ணும் கருத்துமாய் இருக்கிறார். இயேசுவைப் போல புனித பவுலும் "நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு!" (1கொரி.9:16) என இறுமாப்புடன் கூறுவார்.

"பலரைக் கிறிஸ்துவிடம் கொண்டுவர என்னை எல்லாருக்கும் அடிமையாக்கிக் கொண்டேன்" (1கொரி.9:19) என இரண்டாம் வாசகத்தில் பூரிப்புடன் பவுல் கூறுகிறார். இயேசுவைக் கண்டடைந்த நாள் முதல் புனித பவுலின் வாழ்க்கைப் போராட்டம் மிகுந்ததாக இருந்தது. நற்செய்தியை அறிவிப்பதில் கிடைக்கும் மனநிறைவே தமக்கு கைமாறு என பவுல் நம்பினார் (1கொரி.9:18).

முதல் வாசகத்தில் யோபு "மண்ணில் வாழ்வது மனிதருக்குப் போராட்டந்தானே?" எனபுலம்புவார். சொத்து சுகத்தையும் உடல் நலத்தையும் இழந்த அப்பாவி மனிதனாக தவித்தப் போதும், தான் நம்பும் கடவுள் கைவிடமாட்டார் என்ற உறுதியான இறைநம்பிக்கையில் வாழ்ந்தார், யோபு. துன்பத்திலும் இறைவனைப் பழிக்கவில்லை மாறாக தான் வழிபடும் இறைவன் காப்பார் என்ற திடமான உள்ளத்துடன் வாழ்ந்தார். பவுல், தமது துன்பத்திலும் நற்செய்தியை அறிவிப்பதிலுள்ள மனநிறைவே தமக்கு கைமாறு என பவுல் நம்பினார் (1கொரி.9:18).

கப்பர்நாகும் ஊரில் பலரின் பிணிகளைப் போக்கி, பேய்களை ஓட்டிய இயேசுவிற்கு மக்களின் ஆதரவு பெருகி விட்டது. "எல்லாரும் உம்மைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்" (மாற்கு 1:37) என சீடர்கள் அவருக்குப் புகழாரம் சூட்டுகின்றனர். அந்த ஊரிலேயே தங்கி, செல்வாக்குமிக்க மனிதராக இயேசு வாழலாம் என்பது அவர்களது எண்ணமாக இருந்திருக்கலாம். . ஆனால் அது இயேசுவின் திருவுளமல்ல. ஊரெல்லாம் சென்று நற்செய்தியைப் பறைசாற்றவே வந்தேன் என வலியுறுத்துகிறார். இயேசுவின் பணியின் நோக்கத்தையும் இலக்கையும் மாற்கு நற்செய்தியாளர் இங்கு நன்கு படம் பிடித்துக் காட்டுகிறார். நற்செய்தியைப் போதிப்பது, பிணியாளரைக் குணப்படுத் துவது, பேய்களை விரட்டுவது பின்னர் அடுத்த ஊருக்குப் புறப்படுவது. இது ஆண்டவரின் (SOP) சீரான நடைமுறை.

மண்ணகத்தில் தீய ஆவியின் கொட்டத்தை அடக்க போர் முரசு கொட்டப்படுகிறது என கடந்த வாரம் கண்டோம். இயேசு யார் என்பதை தீய ஆவி அறிந்திருப்பதை வெளிப்படுத்த அவர் தடை விதித்தார். .பின்னர் சீமோன் (பேதுரு), வீட்டிற்குச் செல்லும் இயேசு, சீமோனின் மாமியார் காய்ச்சலாய் இருப்பதைக் கண்டு, கையைப் பிடித்து அவரைக் குணமாக்குகிறார். இதுவெல்லாம் ஓய்வுநாளில் நடக்கிறது. ஓய்வுநாளில் வேலை செய்யக்கூடாது என்பது யூதச் சட்டம். இயேசு சட்டத்தை மீறுகிறார். யூதத் தலைவர்களின் கோபத்தைச் சம்பாதித்துக் கொள்கிறார். சட்டம் என்பது மனிதனுக்காக உருவாக்கப்பட்டது, அவனுக்கு தொல்லையாக இருக்கக்கூடாது. சட்டத்திற்காக மனிதனை வதைப்பது நியாயமா? சட்டத்திற்காக உதவி தேவைப்படுவோருக்கு உதவாமல் இருப்பது தர்மா? அவ்வாறே தீய ஆவியை ஓட்டவும், சீமோனின் மாமியார் காய்ச்சலைப் போக்கவும் இயேசு சட்டத்தை மீறுகிறார். இங்கு தீய ஆவி பிடித்தவர் மீதும் சீமோனின் மாமியார் மீதும் இயேசு காட்டிய பரிவிரக்கம் கவனிக்கத்தக்கது. காலாவதி யான சமூக-கலாச்சாரக் கட்டுப்பாடுகளைக் கடந்து சக மனிதர்கள் மீது பரிவிரக்கம் காட்டுவோம், பாசத்தோடு வாழ்வோம்.

*அந்தோனி இன்னாசி, ஸ்ரீ கெம்பாஙான்*

**பொதுக்காலத்தின் 5-ஆம் ஞாயிறு**

யோபு 7: 1-4.6=7
திபா 146:1-2.3-4.5-6
1 கொரி 9:16-19.22-23
மாற்கு 1: 29-39

**ஞாயிறு வாசகம்: ஆண்டு 2**

**வாரநாள் முதல் வாசகம்: I**
**திருப்புகழ் மாலை : வாரம் I**